கூடுதல் மாவட்ட நீதிமன்றம். விருதுநகர்

அ.வ.எண். 67-2021

வாதி தரப்பு 2வது சாட்சி அருண்பாண்டியன் என்பவரின் வாக்குமு:லம் (1869ம் ஆண்டு சாட்சியசட்டம் 44வது பிரிவு 6வது விதியின் ஏற்பாட்டின்படி திருமதி.எம்.சுமதி, மொழிபெயர்ப்பாளர் என்பவரால் ஆணையிட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது)

| | |
|---|---|
| பெயர் : அருண்பாண்டியன் | சாதி : |
| தகப்பனாா்-:பழனிசாமி | சமயம் :இந்து |
| கிராமம் : விருதுநகர் | தொழில் : டேடா என்டாி ஆப்பரேட்டர் |
| தாலுகா : விருதுநகர் | வயது : 27 |

நாள்: 30.01.2023.

வா.சா.2

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் ˙வாதி தரப்பு 2 வது சாட்சி. எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. ஆதார் அட்டை வா**.**சா**.**ஆ**.5.** என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 புரோ நோட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

கூடுதல் மாவட்ட நீதிமன்றம். விருதுநகர்
அ.வ.எண்.67-2021

வாசா.2

நாள்: 07.02.2023.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : தாவா புரோ நோட் எழுதும் காலத்தில் நான் விருதுநகரில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். 1,2 பிரதிவாதிகளை புரோ நோட் எழுதுவதற்கு முன்னால் எனக்கு தெரியும். புரோ நோட்டை தவிர வேறு ஆவணங்களில் 1,2 பிரதிவாதிகளின் கையொப்பங்களை நான் பார்த்ததில்லை. இந்த வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்துப் பார்த்தேன். அந்த எதிர்வழக்குரையில் நான் பணம் வாங்கவில்லை என்றும் தாவா புரோ நோட்டில் உள்ள கையொப்பங்கள் போர்ஜரியாக போடப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். 2ம்பிரதிவாதியின் கையொப்பம் உள்ள கிரைய ஆவணம் எங்களிடம் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் வருவாய் வில்லையில் உள்ள முதல் கையெழுத்து தமிழில் உள்ளதா ஆங்கிலத்தில் உள்ளதா என்றால் தமிழில் உள்ளதாக தெரிகிறது. புரோ நோட் படிவம் மற்றும் ஸ்ட்ம்ப் பிரதிவாதிகள் வரும் போது வாங்கி வந்தார்கள். பிரதிவாதிகள் எனது அப்பாவிடம் புரோ நோட் வாங்குவதற்கு முன்பே கடன் கேட்ட விபரம் எனக்கு தெரியும். எனது அப்பா கடன் தொகை பதிமூன்று இலட்சத்தை வங்கியிலிருந்து எடுத்துக் கொடுத்தாரா என்றால் சேமிப்பிலிருந்து கொஞ்ச தொகையும், அப்பாவின் அண்ணனிடமும், மைத்துனரிடம் கொஞ்சம் தொகையும் வாங்கி கொடுத்தார். ரூபாய் ஏழு இலட்சம் எனது அப்பா அவரது சேமிப்பிலிருந்து கொடுத்தார். பெரியப்பாவிடமிருந்து ரூபாய் ஐந்து இலட்சமும், மாமாவிடமிருந்து ரூபாய் ஒரு இலட்சமும் வாங்கி கொடுத்தார். எனது அப்பா, பெரியப்பா, மாமா ஆகியோருக்கு பெரிய தொகை கொடுக்க வசதி வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. எனது பெரியப்பா குருசாமி தமிழ்நாடு போக்குவரத்து துறையில் நடத்துனராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். எனது மாமா பாஸ்கரன் சொந்தமாக ஆட்டோ வைத்து ஓட்டி வருகிறார். நானும், எனது அ ப்பாவும், பெரியப்பா குருசாமி, மாமா ஆகிய நான்கு பேரும் சேர்ந்து பிரதிவாதியின் பணத்தை அபகரிக்க போர்ஜரியாக கையொப்பங்களை போட்டு தாவா புரோ நோட்டை உற்பத்தி செய்தோம் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து தாவா புரோ நோட்

எழுதிக் கொடுத்து கடன் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் என் அப்பா கேட்டுக் கொண்டதால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பெரியப்பா, மாமா ஆகியோர் விருதுநகரில் தான் குடியிருக்கிறார்கள்.

மறுவிசாரணை : இல்லை.